


# ரத்தத்தின் ரத்தங்களும், 'ரத்ததான' கலாட்டாவும்...!

**ஏ.எம்.சுதாகர்**


ரவிசந்திரன்


செல்வராஜ்

ரத்ததான முகாமில், ரத்தத்தின் ரத்தங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலால் சேலம் அ.தி.மு.க.வில் திடீர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு, அண்ணா தொழிற்சங்கத்தின் சார்பில் 62 பேர் சேலம் அரசு மருத்துவமனையில் ரத்ததானம் செய்தனர். இந்நிகழ்ச்சியை அண்ணா தொழிற்சங்கத்தின் சேலம் மண்டல செயலாளர் சென்ன கிருஷ்ணன் ஏற்பாடு செய்திருந்தார்.

சேலம் எம்.பி. செம்மலை ரத்ததான முகாமைத் துவக்கி வைக்க, அவருடன் அண்ணா தொழிற்சங்க பேரவைச் செயலாளர் சின்னசாமி, சேலம் 1வது தொகுதி எம்.எல்.ஏ. ரவிசந்திரன், மேற்கு மாவட்ட செயலாளர் சமுத்திரம் சரவணன், மாநகர செயலாளர் எம்.கே. செல்வராஜ், கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.கே. செல்வம் ஆகியோர் வந்திருந்தனர். தொண்டர்கள் ஒவ்வொருவராக ரத்ததானம் செய்ய, முகாமை துவக்கி வைத்துவிட்டு அ.தி.மு.க. நிர்வாகிகள் சென்றுவிட்டனர்.

இதற்கிடையே ரத்ததானம் செய்ய அண்ணா தொழிற்சங்க சேலம் மண்டல இணை செயலாளர் ஜீவா பெரியசாமி வந்தபோதுதான் கலாட்டா அரங்கேறியது. இதில், தான் தாக்கப்பட்டதாகக் கூறி அரசு மருத்துவமனையில் ஜீவா பெரியசாமி அட்மிட் ஆனதால் நிலைமை சீரியஸானது. நாம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் ஜீவா பெரியசாமியிடம் பேசினோம்.

"தொழிற்சங்க மண்டல செயலாளர் சென்ன கிருஷ்ணன் மீது பல குற்றச்சாட்டுகள் அடங்கிய பெட்டிஷனை அம்மாவிடம் கடந்த 22ஆம் தேதி கொடுத்து விட்டு வந்தேன். அதைத் தொடர்ந்து விசாரணைக்கு வரச் சொல்லி சென்ன கிருஷ்ணனுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து தகவல் வந்தது. இந்த நிலையில் நான் ரத்தம் கொடுப்பதற்காக டெஸ்ட் எடுக்கச் சென்றேன். அப்போது சென்னகிருஷ்ணனும், அலுவலக செயலாளர் பாலசுந்தரமும் சேர்ந்துகொண்டு, 'அம்மாவிடம் போய் பெட்டிஷன் கொடுத்துவிட்டு எங்களுடன் சேர்ந்து ரத்தம் கொடுக்க வர்றியா... எங்கேயோ போய் ரத்தம் கொடு... எங்களுடன் வராதே...' என்று கூறியபடியே என்னை அடித்துக் கீழே தள்ளிவிட்டனர். அதற்குள் போலீஸ் வந்து எல்லோரையும் விரட்ட, எம்.எல்.ஏ. ரவிசந்திரனும் சண்டை போட்டவர்களை சமாதானம் செய்தார். நான், செங்கோட்டையன், ஓ. பன்னீர்செல்வம் ஆகியோருக்குத் தகவல் கொடுத்தேன். அவர்கள் இதுகுறித்து விசாரணை செய்ய முடிவு செய்துள்ளனர். எனது நெஞ்சில் வலி அதிகம் இருந்ததால் தற்போது ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருக்கிறேன்" என்றார்.




ஜீவா பெரியசாமி

அடுத்து நாம் எம்.எல்.ஏ. ரவிசந்திரனிடம் பேசினோம்.

அவரோ, "நாங்க ரத்ததான முகாமை துவக்கி வைத்துவிட்டு வந்துவிட்டோம். அப்புறம் எப்படி அடிச்சிகிட்டாங்கன்னு தெரியாது. திடீரென போலீஸெல்லாம் வந்து விரட்டியது. நான் போலீஸாரிடம், 'ஏங்க கட்சிக்காரனை அடிச்சி விரட்டுறீங்க'ன்னு கேட்டு சமாதானம் பேசினேன். கட்சிக்காரர்களிடம் 'சண்டை போடாதீர்கள்' என்று கூறினேன். அவர்களுக்குள் ஏதோ தொழிற்சங்க பிரச்சினை முன்பே இருந்திருக்கும் போலிருக்கிறது. அதனால்தான் இந்த கலாட்டா" என்றார்.

தொடர்ந்து நம்மிடம் பேசிய மாநகர மாவட்டச் செயலாளர் எம்.கே. செல்வராஜ்,

"விழாவை துவக்கி வைத்துவிட்டு நான் எம்.பி. செம்மலையுடன் வேறு நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டேன். மாலை 7 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்தன. மறுநாள் ஜீவா பெரியசாமி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருப்பதாக தகவல் கிடைத்தது. அண்ணா தொழிற்சங்கம் தனி அமைப்பு என்பதால் அவர்கள்தான் விசாரிக்க வேண்டும். ஒரு நல்ல செயல் செய்யும்போது கட்சிக்காரர்களுக்குள்ளேயே இதுபோல சம்பவங்கள் நடப்பது வேதனையாக இருக்கிறது" என்றார்.

இறுதியாக நாம் சேலம் அண்ணா தொழிற்சங்க மண்டல செயலாளர் சென்னகிருஷ்ணனிடம் பேசினோம்.

"யார் வேண்டுமானாலும் புகார் கொடுக்கலாம். அதில் உண்மை இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஜீவா பெரியசாமிக்கு புகார் கொடுப்பதுதான் வேலையே. 100 ரூபாய் கொடுத்தால் யார் மீது வேண்டுமானாலும் பெட்டிஷன் போடுவார். ஜி.ஹெச்சில் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. எம்.பி. வந்திருந்தார். மூன்று மாவட்டச் செயலாளர்கள் வந்திருந்தனர். பேரவைச் செயலாளர் வந்திருந்தார். 62பேர் ரத்தம் கொடுத்தனர். இதில் ஒருவராவது அப்படி ஒரு சம்பவம் நடந்ததாகக் கூறினால் ஏற்றுக் கொள்கிறேன். ஜீவா பெரியசாமியே சட்டையைக் கிழித்துக்கொண்டு ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருக்கிறார்" என்று முடித்துக்கொண்டார்.